செ.வெ.எண்: 825/2016 நாள்: 24.11.2016

**தேசிய ஒருமைப்பாடு முகாமினை முன்னிட்டு தேசியமாணவர் படை மாணவ, மாணவிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தூய்மை பணிகளை மேற்கொண்டார்கள்**

தமிழ்நாடு இயக்குநரகத்தின் 3 (தமிழ்நாடு) தூத்துக்குடி கப்பற்படையின் தலைமையில் ஜேம்ஸ் பொறியியல் கல்லூரியில் 15.11.2016 முதல் 25.11.2016 முடிய சுமார் 600 மாணவ, மாணவியர் கலந்து கொண்ட தேசிய ஒருமைப்பாடு முகாம் நடைபெறுகிறது.

பாரத பிரதமரின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர் அலுவலக சுற்றுப்புறம் தூய்மை செய்யப்பட்டது.

இப்பணிகளை மேற்கொண்ட 26 தேசிய மாணவர் படை மாணவ, மாணவிகளுடன் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் (23.11.2016) அன்று கலந்துரையாடினர்.

இதற்கான ஏற்பாடுகளை லெப்டினண்ட் கமாண்டர் திரு. எஸ்.ரவிராமன் செய்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. டி.ஹெட்சி லீமா அமலினி கலந்து கொண்டார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.